திரு. அ. ராஜன்: மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, நாகர்கோயிலில் உள்ள நீதிமன்ற வளாகத்தில் 3 குற்றவியல் நடுவர் நீதிமன்றங்கள் உள்ளன. இதில் நம்பர்-1 குற்றவியல் நடுவர் நீதிமன்றத்தை நாகர்கோயிலிலிருந்து மாற்றி கன்னியாகுமரிக்குக் கொண்டு செல்ல, கடந்த அ.தி.மு.க. சர்க்கார் ஆணை பிறப்பித்தது. பொதுவாக, Government Policy என்பது ஒரு தாலுகாவிற்கு ஒரு நீதிமன்றம் இருக்க வேண்டும் என்பதாகும் என்று அறிகிறேன். நாகர்கோயிலும், கன்னியாகுமரியும் ஒரே அகஸ்தீஸ்வரம் தாலுகா பகுதியைச் சேர்ந்ததாகும். எனவே, அரசு உத்தேசித்துள்ள கன்னியாகுமரிக்கு மாற்றும் எண்ணத்தை மாற்றி, தொடர்ந்து மாவட்டத் தலைநகரமான நாகர்கோயிலிலேயே அந்தக் Court-ஐ இயக்கிட அரசு முன்வருமா என்பதைத் தங்கள்வாயிலாக அறிய விரும்புகிறேன்.

மாண்புமிகு திரு. இ. பெரியசாமி: மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, அப்படிக் கருத்துரு அரசிடம் இருந்தால், மாற்றாமல் இருந்தால் நிச்சயமாக இந்த அரசு மாற்றும்.

மாண்புமிகு பேரவைத் தலைவர்: வினா வரிசை எண் 84, மாண்புமிகு உறுப்பினர் செல்வி கே. பாலபாரதி, மாண்புமிகு வருவாய் மற்றும் சட்டத் துறை அமைச்சர் அவர்கள்.

84—

ஒருங்கிணைந்த நீதிமன்றக் கட்டடம்

***2178—செல்வி கே. பாலபாரதி:**

மாண்புமிகு வருவாய் மற்றும் சட்டத் துறை அமைச்சர் கீழ்க்காணும் வினாவிற்கு விடையளிப்பாரா—

திண்டுக்கல் நகரிலுள்ள மாவட்ட ஒருங்கிணைந்த நீதிமன்றங்களின் கட்டடத்தை வேறு இடத்திற்கு மாற்றும் செயற்குறிப்பு அரசின் பரிசீலனையில் உள்ளதா?

மாண்புமிகு திரு. இ. பெரியசாமி, வருவாய் மற்றும் சட்டத் துறை அமைச்சர்: மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே,

திண்டுக்கல் நகரிலுள்ள மாவட்ட ஒருங்கிணைந்த நீதிமன்றங்களின் கட்டடத்தை வேறு இடத்திற்கு மாற்றும் செயற்குறிப்பு எதுவும் அரசின் பரிசீலனையில் இல்லை.

TRUTH ALONE TRIUMPHS வாய்மையே வெல்லும்

2006 ஆகஸ்ட் 24]

செல்வி கே. பாலபாரதி: மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, திண்டுக்கல் நகரில் மாவட்ட ஒருங்கிணைந்த நீதிமன்றங்களினுடைய கட்டடம், பல்வேறு இட நெருக்கடிகளுக்கு மத்தியில் அமைக்கப்பட்டிருக்கிறது. அதனுடைய வலப்புறத்தில் புனித வளனார் பெண்கள் மேல்நிலைப் பள்ளி இருக்கிறது. 5,000-க்கும் மேற்பட்ட மாணவிகள் வருவதால் அதற்கு அருகிலேயே பேருந்து நிலையமும் இருப்பதன் காரணமாக அடிக்கடி போக்குவரத்து நெரிசல் என்பதும், நெருக்கடி என்பதும் ஏற்பட்டு வருகிறது. சென்றமுறை அதிகாரிகள் கூட்டத்தில் சிலர் இந்தக் கட்டடம் மாற்றப்படும் என்று தெரிவித்தார்கள். அதன் அடிப்படையிலேதான் இந்தக் கேள்வியை எழுப்பினேன். ஆகவே, அமைச்சருடைய பதிலுக்கு நன்றி கூறிக்கொள்கிறேன்.

மாண்புமிகு திரு. இ. பெரியசாமி: மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, மாண்புமிகு உறுப்பினர் அவர்கள் திண்டுக்கல் மாவட்ட ஒருங்கிணைந்த நீதிமன்றம் மாற்றப்படுமா என்று அவருடைய கேள்வியிலே மீண்டும் கேட்டிருக்கிறார்கள். குறிப்பாக, நகர்மன்றத்திற்கும், நீதிமன்றத்திற்கும் ஏற்பட்ட ஒப்பந்தத்தின்படி 81 இலட்சம் ரூபாய் திண்டுக்கல் நகர்மன்றம், நீதிமன்றத்திற்குப் பணம் கொடுத்தால் அதை மாற்றுகின்ற பணி நடைபெறும்.

மாண்புமிகு பேரவைத் தலைவர்: மாண்புமிகு உறுப்பினர் திரு. சி. கோவிந்தசாமி.

திரு. சி. கோவிந்தசாமி: மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, அதோடு தொடர்புடைய ஒரு கேள்வி என்ற முறையில் மாண்புமிகு அமைச்சர் அவர்களுடைய கவனத்திற்காகக் கேட்கிறேன். திருப்பூர் பகுதியைச் சமீபத்திலே நம்முடைய கலைஞர் அவர்கள் அரசு மாநகராட்சியாக அறிவித்திருக்கிறது. வளர்ந்துவருகிற ஒரு பெருநகரமாக திருப்பூர் மாறிக் கொண்டிருக்கிறது. திருப்பூர் நகரத்தில் உள்ள நீதிமன்ற வளாகங்களை ஒருங்கிணைத்து, ஒரு புதிய ஒருங்கிணைந்த நீதிமன்ற வளாகம் அமைக்க வேண்டிய அவசியம் குறித்து நான் மாண்புமிகு அமைச்சரிடத்திலும் நேரில் தெரிவித்திருக்கிறேன். அவரும், அது நியாயம் என்று ஏற்றுக்கொண்டிருக்கிறார். ஆகவே, அதற்கான பணிகள் எப்போது தொடங்கப்படும் என்று அமைச்சர் அவர்கள்மூலம் அறிய விரும்புகிறேன்.

மாண்புமிகு திரு. இ. பெரியசாமி: மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, அரசு, மத்திய அரசினுடைய நிதியை எதிர்பார்த்துக் கொண்டிருக்கிறது; வந்தவுடனே நிச்சயமாக அதற்கு முக்கியத்துவம் அளிக்கப்படும்.

மாண்புமிகு பேரவைத் தலைவர்: மாண்புமிகு உறுப்பினர் திரு. அ. தமிழரசு.

திரு. அ. தமிழரசு: மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, ஓமலூரிலே தனி நீதிமன்ற வளாகம் அமைப்பதற்காக 75 சென்ட் நிலம் தேர்வு செய்யப்பட்டிருக்கிறது. ஒன்றரை கோடி ரூபாய் அரசால் நிதி ஒதுக்கப்பட்டும், இன்னும் கட்டடப் பணி தொடங்கப்படாமல் இருக்கிறது. அந்தக் கட்டடம் உடனடியாகத் தொடங்கப்படுமா என்று தங்களின்வாயிலாக அறிய விரும்புகிறேன்.

மாண்புமிகு திரு. இ. பெரியசாமி: மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, மாண்புமிகு உறுப்பினர் கோரியதைப்போல, நிதி ஒதுக்கீடு செய்திருந்தால், நிச்சயமாகக் கட்டடம் கட்டுகின்ற பணி தொடங்கியிருக்கும். ஒருவேளை நிதி இன்னும் ஒதுக்கப்படாமலிருந்தால், வருகின்ற காலக்கட்டத்திலேதான், அந்த நீதிமன்ற வளாகம் கட்டுவதற்கு நிதி ஒதுக்கப்படும்.

மாண்புமிகு பேரவைத் தலைவர்: மாண்புமிகு உறுப்பினர் திரு. கு. பிச்சாண்டி.

திரு. கு. பிச்சாண்டி: மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, திருவண்ணாமலை மாவட்ட ஆட்சித் தலைவர் பெருந்திட்ட வளாகம், 200 ஏக்கரிலே அமைந்திருக்கிறது. மாவட்ட நீதிமன்றக் கட்டடங்கள் கட்டும்போது, ஏற்கெனவே இடம் இருக்கின்ற அந்தப் பகுதிகளுக்கு முன்னுரிமை கொடுத்து, கட்டடங்களைக் கட்டித் தர அரசு ஆவன செய்யுமா என அறிய விரும்புகிறேன்.

முற்பகல் 9—55

மாண்புமிகு பேரவைத் தலைவர்: மாண்புமிகு அமைச்சர் அவர்கள்.

2006 ஆகஸ்ட் 24]

மாண்புமிகு திரு. இ. பெரியசாமி: மாண்புமிகு பேரவைத் தலைவா அவர்களே, மாண்புமிகு உறுப்பினரின் கோரிக்கையைக் கண்டிப்பாக அரசு பரிசீலிக்கும்.

மாண்புமிகு பேரவைத் தலைவர்: மாண்புமிகு உறுப்பினர் திரு. வேல்முருகன்.

திரு. தி. வேல்முருகன்: மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, கடலூர் மாவட்டம், என்னுடைய பண்ருட்டி சட்டமன்றத் தொகுதியை உள்ளடக்கிய பகுதியில் ஒருங்கிணைந்த நீதிமன்ற வளாகம் வேண்டுமென்று கடந்த 5 ஆண்டுகளாக வற்புறுத்தி, அப்போதைய சட்ட அமைச்சர் அவர்கள், இடத்தையும் தேர்வு செய்து, நிதி மதிப்பீட்டையும் தயார் செய்து, 2 கோடி ரூபாய் நிதி செலவாகும் என்று கணக்கிட்டு, மத்திய அரசாங்கத்தினுடைய பங்களிப்பு நிதி வந்தவுடனேயே தொடங்கப்படும் என்று அறிவித்தார்கள். ஆனால், இதுவரையிலும் மத்திய அரசாங்கத்தின் நிதி வரவில்லை என்ற காரணத்தினால், அதனைக் கட்டுவதற்கு வாய்ப்பு இல்லையென்று சொன்னார்கள். நம்முடைய மாண்புமிகு சட்டத் துறை அமைச்சர் அவர்கள், இந்த ஆண்டு மத்திய அரசாங்கம் தமிழகத்திற்கு ஒதுக்குகின்ற நிதியிலிருந்து முன்னுரிமை அடிப்படையில், பண்ருட்டியில் ஒருங்கிணைந்த நீதிமன்ற வளாகமும், அதேபோல் கடலூரில் ஒருங்கிணைந்த நீதிமன்ற வளாகமும் கட்ட நிதியை ஒதுக்கி, அவற்றைக் கட்டித் தருவதற்கு ஆவன செய்வார்களா என்பதைத் தங்கள்வாயிலாக அறிய விரும்புகிறேன்.

மாண்புமிகு பேரவைத் தலைவர்: மாண்புமிகு அமைச்சர் அவர்கள்.

மாண்புமிகு திரு. இ. பெரியசாமி: மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, மாண்புமிகு உறுப்பினர் குறிப்பிட்டதைப்போல இந்தத் துறையினுடைய பதிலுரையிலே, மிக விளக்கமாகத் தெரிவித்திருக்கிறேன். மத்திய அரசிடத்திலே கடந்த மாதம் இந்த அரசின் சார்பாக மீண்டும் அறிவுறுத்தல் கடிதம் அனுப்பப்பட்டிருக்கிறது. அதற்கான முயற்சிகளும் மேற்கொண்டிருக்கிறோம். மத்திய அரசு நிதி நிச்சயம் வரும். உறுதியாக ஒருங்கிணைந்த நீதிமன்ற வளாகங்கள் தமிழகத்திலே கட்டப்படும்.

மாண்புமிகு பேரவைத் தலைவர்: வினா வரிசை எண் 85, மாண்புமிகு உறுப்பினர் திரு. சு. குணசேகரன், மாண்புமிகு சுற்றுலாத் துறை அமைச்சர் அவர்கள்.